NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 24 March 2023

# பாடத் தரவரிசை: என்யுஎஸ், என்டியு மீண்டும் உச்சம்

பாடங்கள் அடிப்படையிலான உலகளாவியத் தரவரிசையில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகமும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் மீண்டும் ஏற்றம் கண்டுள்ளன.

என்யுஎஸில் கற்பிக்கப்படும் 14 பாடங்கள், முதல் பத்து இடங்களிலும் 40 பாடங்கள், முதல் 50 இடங்களிலும் இடம் பிடித்தன. முதல் பத்து இடங்களில் இடம்பெறும் பாடங்களில் கலை வரலாறு, கட்டடப் பொறியியல், புவிவியல் ஆகியவை அடங்கும். என்டியுவில் கற்பிக்கப்படும் ஐந்து பாடங்கள் முதல் பத்து இடங்களில் இடம்பெற்றன. அவற்றில் தொடர்பு, ஊடகக் கல்வி, மூன்று பொறியியல் பாடங்கள் ஆகியவை அடங்கும். சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் இரண்டு பாடங்கள், முதல் 50 இடங்களில் இடம்பெற்றன. அவை வர்த்தக, நிர்வாகக் கல்வி மற்றும் கணக்கியல்.

சிங்கப்பூர் தொழில்நுட்ப, வடிவமைப்புப் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் மூன்று பாடங்கள் உலகளாவிய தரவரிசையில் இடம்பெற்றுள்ளன. அவை கட்டடக் கலை மற்றும் ஓவியம், வடிவமைப்பு.

அவை இரண்டும் 151-200 பிரிவில் இடம்பெற்றன.

கடந்த ஆண்டின் தரவரிசையில் என்யுஎஸின் 16 பாடங்களும் என்டியுவின் ஏழு பாடங்களும் முதல் பத்து இடங்களில் இடம்பெற்றன.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.